# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337/நகல் எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முறையீட்டு மனு எண் : 1022/பேரூ-2/2016

ஆணை எண் : 138/2017

நாள் : 31.05.2017

திரு. R. சோமசுந்தரம்,
343, மெயின் ரோடு,
பெண்ணாடம் - 606 105.
கடலூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பெண்ணாடம் பேரூராட்சி,
கடலூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

கடலூர் மாவட்டம் 343, மெயின் ரோடு, பெண்ணாடம் என்ற முகவரியில் வசிக்கும் திரு.R.சோமசுந்தரம், அவரது 17.10.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம் முறைமன்ற நடுவத்தில் 19.10.2016 அன்று பெறப்பட்டு 1022/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு உரிய ஆவணங்கள் மற்றும் வழக்கு மூலங்களின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

2. கடலூர் மாவட்டம், பெண்ணாடம், பேரூராட்சியைச் சேர்ந்த திரு . R. சோமசுந்தரம், என்பவர் பெண்ணாடம் கிராமத்தில் வீடு கட்டுவதற்கு கட்டிட வரைபட அனுமதி வேண்டி 12.10.2015 அன்று பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் மனு செய்துள்ளதாகவும் அரசு உத்தரவுபடி வீடு கட்ட வரைபட அனுமதி கோரி மனு செய்து 30 நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டும் என்றும் ஆனால் மிகவும் காலதாமதமாக சுமார் 9 மாதங்கள் 26 நாட்கள் கடந்து 01.08.2016 தேதியிடப்பட்டு கட்டிட அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் தனக்கு பின்பு மனு செய்தவர்களுக்கு கட்டிட வரைபட அனுமதி முன்பாகவே வழங்கப்பட்டுள்ளது என்றும், இதற்கான ஆதாரம் தன்னிடம் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும்

வரைபட அனுமதி வழங்கியதில் முறை கேடுகள் நடந்துள்ளதாக தெரிவித்து இந்த முறைகேடு மற்றும் ஊழல் தொடர்பாக விசாரணைக்கு ஏற்பாடு செய்து முறைகேட்டினை வெளி கொண்டு வந்து மீண்டும் இது போன்று வேறு எவருக்கும் நடக்காமல் இருக்க ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

03.11.2016 நாளிட்ட முறைமன்ற நடுவ அறிவிப்பாணையின் வாயிலாக மனுதாரரின் முறையீட்டு மனு மீது செயல் அலுவலரின் விளக்க அறிக்கை கோரப்பட்டு பெறப்பட்டது . பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் கீழ்கண்ட விவரங்களை சமர்பித்துள்ளார்:-

3. "மனுதாரர் 12.10.2015 அன்று கட்டிட அனுமதி கோரி விண்ணப்பம் வழங்கியது உண்மைதான். மனுதாரர் 29.05.2015 தேதி கொடுத்துக்கொண்ட விண்ணப்பம்தான் 23.06.2015அன்று திருப்பப்பட்டது- அதன்பிறகு இப்பேரூராட்சிக்கு செயல் அலுவலராக மாறுதலில் வரப் பெற்ற செயல் அலுவலரிடம் மனுதாரர் 12.10.2015ம் தேதி மனு அளித்துள்ளார். ஆனால், மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன்படி கடந்த 19.03.016ம் தேதி வரைபட அனுமதி மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரம் கேட்டதற்கும், 29.04.2016ம் தேதியிட்ட மேல் முறையீட்டு அலுவலரின் கடிதக் குறிப்பிற்கு இணங்க பேரூராட்சி பொது தகவல் அதிகாரி 10.05.2016ம் தேதியிட்ட கடிதத்திற்கும் பதில் 23.05.2016ம் தேதிய பதிவுத் தபாலில் அனுப்பிய தகவலில் விண்ணப்பங்களில் காணப்பட்ட குறைபாடுகளை களைந்து மீள சமர்ப்பிக்க 09.11.2015 அன்றே எனக்கு திருப்பப்பட்டுள்ளது என்று தவறுதலாக கூறப்பட்டுவிட்டது. மனுதாரரின் விண்ணப்பம் திருப்ப அனுப்பப்படவில்லை மனுதாரரின் முதல் மனுவினை திருப்பி அனுப்பியதை வைத்து அவ்வாறு பதில் அனுப்பி வைக்கப்பட்டுவிட்டது என்பதனை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரரின் விண்ணப்பம் திருப்ப அனுப்பியதாக சொன்னது தவறு. மனுதாரர் 13.07.2016ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு அவருக்கு பின்பு மனு கொடுத்தவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பது உண்மைதான். மனுதாரரின் விண்ணப்பம் பரிசீலனைக்கு காலதாமதம் ஆனதற்கு இதற்கு முன்பு இப்பேரூராட்சியில் பணியாற்றிய செயல் அலுவலரிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அதற்கு அந்த அலுவலர்கள் மனுதாரரின் இடம் வருவாய் ஆவணங்களில் நத்தம் என்று இருந்ததால் அதுகுறித்த விசாரணைக்கு காலதாமதமானது. மனுதாரரின் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து இப்பேரூராட்சி செயல் அலுவலரால் மனுதாரருக்கு கட்டிட அனுமதி வழங்கலாம் என இளநிலை உதவியாளருக்கு அறிவுரை வழங்கியதால் அரசு விதிகளின்படி, கட்டுமான தொழிலாளர் நல நிதித் தொகைக்கு வங்கி வரைவோலை எடுத்துக் கொடுக்கச் சொல்லி இவ்வலுவலக இளநிலை உதவியாளர் கண்ணன் என்பவர் தெரிவித்தது உண்மை. அப்போது இவ்வலுவலக செயல் அலுவலர் (பொறுப்பு) செயல் அலுவலராக இருந்ததால் உடனடியாக கட்டிட அனுமதி வழங்குவதில் காலதாமதம் ஆகிவிட்டது. மேலும், மனுதாரர் தெரிவித்துள்ள 08.08.2016 அன்று இவ்வலுவலக உதவியாளர் மோகன் அலுவலக வேலையாக வெளியூருக்கு சென்றிருந்ததால், இவ்வலுவலக கணினி இயக்குபவர் மணிகண்டன் என்பவர் மூலம் மனுதாரரிடம் நேரிடையாக கட்டிட அனுமதி கொடுத்து வர அறிவுரை வழங்கப்பட்டது. இவ்வலுவலக பணியாளர்கள் எவரும் மனுதாரரிடம் தொகை எதுவும் வழங்குமாறு கேட்கவில்லை. எனவே, இதில் ஊழல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

மனுதாருக்கு காலம் தாழ்த்தி கட்டிட அனுமதி வழங்கப்பட்டதில் உள் நோக்கமோ, முறைகேடுகளோ நடந்ததாக தெரியவில்லை. இவ்வலுவலகத்தில் செயல் அலுவலராக பணிபுரிந்தவர் கூடுதல் பொறுப்பாக இப்பேரூராட்சியில் பணிபுரிந்து வந்ததால் மனுதாருக்கு கட்டிட அனுமதி வழங்குவதில் காலதாமதம் ஆனது என்றும் தகவல் அறியும் உரிமை மனுவில் மனு திருப்பப்பட்டது என்று கூறியது மனுதாரர் முதல் முறையாக அளித்த விண்ணப்பத்தினை மீள அனுப்பியிருந்ததை தவறுதலாக சொல்லப்பட்டுவிட்டது. மனுதாருக்கு கட்டிட அனுமதி வழங்குவதில் காலதாமதம் ஆனது மட்டும்தான் உண்மை. ஆனால், கட்டிட அனுமதி கட்டிட அனுமதி வழங்குவதில் முறைகேடோ அல்லது ஊழலோ நடைபெறவில்லை. தற்போது இப்பேரூராட்சிக்கு முழுப் பொறுப்புடன் கூடிய செயல் அலுவலராக நான் கடந்த 05.09.2016 முதல் பணிபுரிந்து வருவதாகவும் இந்த இரண்டு மாத காலத்தில் கட்டிட அனுமதி கோரி வரப்பெறும் விண்ணப்பங்கள் உடனுக்குடன் பரிசீலனை செய்யப்பட்டு உடன் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இன்றைய தேதி வரை இப்பேரூராட்சியில் கட்டிட அனுமதி கோரி வரப்பெற்ற விண்ணப்பங்கள் நிலுவையிலில்லை என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

4. மனுதாரரின் குற்றச்சாட்டு சம்மந்தமாக நேரடியாக விசாரிக்கும் பொருட்டு 8.12.2016 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகி விளக்கமளிக்குமாறு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி மனுதாரர் 8.12.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகி தனது வாக்குமூலத்தில் கீழ்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்:-

"17.10.2016 நாளிட்ட முறையீட்டு மனு என்னால்தான் அனுப்பப்பட்டது. பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் 12.10.2015 அன்று எனது வீட்டு மாடி கட்டிடம் கட்டிட வரைபட அனுமதி கோரி விண்ணப்பத்தை வழங்கினேன், கட்டிட வரைபட அனுமதி செய்ய 30 நாட்களுக்குள் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற விதிகள் இருந்தும் எனக்கு உரிய அனுமதி வழங்கப்படவில்லை. இதுகுறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தில் என்னால் கேட்டபோது, இதுகுறித்து தகவல் அளிக்கப்பட்டது எனக்கு அனுப்பிய பதிலில் எனது விண்ணப்பத்தில் ஏற்பட்ட குறைபாடுகளை களைவதற்காக எனக்கு திருப்பி அனுப்பப்பட்டதாக தகவல் அளிக்கப்பட்டது. ஆனால் திருப்பி அனுப்பப்படவில்லை. இந்நிலையில் 13.7.2016 கடிதம் மூலம் மீண்டும் அனுமதி கோரி விண்ணப்பித்தேன். எனக்கு பின்பு மனு செய்த திரு. ஜெ. சக்கரை என்பவர்க்கு 26.10.2015ல் மனு அனுப்பப்பட்டு வெறும் 17 நாட்களில் 13.12.2015ல் அனுமதி அளித்துள்ளனர். இதேபோன்று நிறைய நபர்களுக்கு முறைகேடாக அனுமதி வழங்கியுள்ளார்கள். வரைபட அனுமதிக்காக வசூல் ரூ.6,300/- கொடுத்தேன். பின்பு மழைநீர் சேகரிப்பு திட்டம் ஏற்கனவே என்னுடைய கட்டிடத்திற்காக செய்யப்பட்டு இருப்பதால் தற்போது கட்டப்படும் முதல் தளத்திற்கும் மழைநீர் சேகரிப்பு திட்டம் செய்யவேண்டும் என்று சொல்லி அதற்கும் ரூ.2000/- வசூலித்தார்கள். கூடுதலாக வாங்கியதற்கு கணக்குத் தவறாக இருக்கிறது என்று சொல்லி ரூ.1000/-திருப்பி தந்துவிட்டார். மழைநீர் சேகரிப்பு வைப்புத் தொகையை கொடுத்துவிட்டார். எனவே திரு. கண்ணன் என்பவர் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மனுவில் குறிப்பிட்டுள்ளபடி பல்வேறு உயர் அதிகாரிகளுக்கு நான் மனு செய்துள்ளேன் இதுபோன்று எவருக்கும் பாதிக்காத வகையில் தாங்கள் ஆணையிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

செயல் அலுவலரின் விளக்க அறிக்கையின்படி, மனுதாரர் 13.07.2016-ம் தேதிய கடிதத்தில் அவருக்கு பின்பு மனு கொடுத்தவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பது உண்மைதான் என்பது புலனாகிறது. மனுதாரரின் இடம் வருவாய் ஆவணங்களில் நத்தம் என்று இருந்ததால், அது குறித்த விசாரணைக்கு காலதாமதமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதையும் அப்போதைய செயல் அலுவலர் கூடுதல் பொறுப்பில் செயல் அலுவலராக இருந்ததால் உடனடியாக கட்டிட அனுமதி வழங்குவதில் காலதாமதம் ஆகிவிட்டது என்பதனையும் முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறாக கட்டிட அனுமதி தாமதமாக வழங்கப்படுவதால் ஊழல் செய்வதற்கும் மற்றும் லஞ்சம் பெறுவதற்கும் வழிவகுக்கும் என்பதனை ஒதுக்கி தள்ளிவிட முடியாது. அரசின் செயல்பாடுகள் மக்களின் அன்றாட அனைத்து தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் வெளிப்படை தன்மை கொண்டதாகவும், அரசு அலுவலர்களின் பணிகள் சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஆற்றப்பட வேண்டுமென்பது மிக அவசியமான ஒன்றாகும். இனிவரும் காலங்களில் இது போன்ற காலதாமதத்திற்கு இடம் அளிக்காமல் மனுதாரரின் கட்டிட அனுமதி போன்று இன்னும் பல கோரிக்கைகளை உடனுக்குடன் ஆய்வு செய்து உரிய சட்டத்திட்டங்களின் கீழும் உரிய கால அளவுக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 31-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-/ஒப்பம்/-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. திரு. R. சோமசுந்தரம்,
   343, மெயின் ரோடு,
   பெண்ணாடம் - 606 105,
   கடலூர் மாவட்டம்.
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   கடலூர் மண்டலம்,
   கடலூர்.
3. உதிரி 5 நகல்கள்